# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 23 | வெள்ளிக்கிழமை 08.08.2025 | கதிர் 279



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக முன்னணி போராட்டம்

## கஜேந்திரகுமார், கஜேந்திரன் பங்கேற்பு





யாழ்ப்பாணம், ஓக.08

தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மாவீரர் போராளிகள் குடும்ப நல காப்பக தலைவர் தீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பொரளை துப்பாக்கிச்சூட்டில் இளைஞர்கள் இருவர் மரணம்

## மேலும் மூவர் வைத்தியசாலையில்




கொழும்பு, ஓக. 08

கொழும்பு, பொரளையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 5 இளைஞர்களில் இருவர் இன்று வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை, சஹஸ்புர சிறிசர அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்துக்கு அருகில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

நேற்று இரவு 8:40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த

7 ➤

# மூதூரில் கோர விபத்து போதனாசிரியர் மரணம்



மூதூர், ஓக. 08

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள பச்சநூர் சந்தியில் இன்று காலை கார் - ரிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர்

7 ➤

# கணவரால் மனைவி வெட்டிப் படுகொலை




அரலகங்வில, ஓக. 08

குடும்பத் தகராறினால் பெண் ஒருவர் அவரது கணவரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அரலகங்வில, தியபெதும சந்தி பகுதியில் நேற்று

7 ➤

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி



நுவரெலியா, ஓக. 08

நுவரெலியா மாவட்டம், மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நபர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற

7 ➤





# கார் - டிப்பர் விபத்து ஒருவர் மரணம

கொழும்பு, ஒக 08

மூதூர் - பச்சநூர் சந்தியில் இன்று (08) காலை கார் மற்றும் டிப்பர் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் காரில் பயணித்த தோப்பூரைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றுமொருவர் படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ஐ)

# மன்னார் காற்றாலை திட்டத்தை இடைநிறுத்த தீர்மானம்

மன்னார், ஒக 08

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குச் சகல தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டப் பணிகளை இடைநிறுத்துவதற்கு மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்னுற்பத்தித் திட்ட விவகாரம் தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி தலைமையில் விசேட பேச்சில் ஈடுபடுபதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் மற்றும் இல்மனைட் கனிய வளம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை விசேட கலந்துரையாடல் மின்சாரத்துறை அமைச்சர் அருண கருணாதிலக தலைமையில் இடம்பெற்றது. (ஐ)

# அவுஸ்திரேலியா தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும்



கொழும்பு, ஒக 08

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தினார்.

அவுஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான 75 ஆண்டுகளுக்கும் மேலான நட்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக தற்போதுள்ள ஒத்துழைப்புத் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தெளிவான தலைமையின் கீழ் வெற்றிகரமான பயணத்திற்கு அவுஸ்திரேலியா தொடர்ந்து ஆதரவை வழங்க தயாராக உள்ளது என்று அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் வலியுறுத்தினார்.

குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான ஆதரவை வழங்க அவுஸ்திரேலியா தயாராக உள்ளது என்று ஆளுநர் நாயகம் வலியுறுத்தினார். (ஐ)



# நூற்றுக்கணக்கான பனை மரங்களுக்கு தீ வைத்த விஷமிகள்



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் நூற்றுக்கணக்கான பனை மரங்களுக்கு விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று மாலை கட்டைக்காடு ராணுவ முகாமிற்கு முன்னால் காணப்பட்ட நூற்றுக்கணக்கான பனைகள் திடீரென தீப்பற்றி எரிந்தது.

நிலைமையை உணர்ந்துகொண்ட இராணுவத்தினர் தீயை அணைப்பதற்காக, தீயணைப்பு வாகனத்தை வரவழைத்ததுடன் மருதங்கேணி இராணுவ முகாமில் இருந்தும் தீயை அணைப்பதற்காக 200 இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்

பற்றி எரியும் தீ ஏனைய பனை மரங்களுக்கும் வேகமாக பரவியது.

சம்பவம் தொடர்பாக கட்டைக்காடு இராணுவ அதிகாரியிடம் பிரதேச ஊடகவியலாளர் வினவிய போது,

இராணுவ முகாமுக்கு முன்னால் காணப்படும் இந்த நூற்றுக்கணக்கான பனைகளுக்கு தீவைப்பது இது முதல் முறை அல்ல இதற்கு முன்பும் பல தடவைகள் இவ்வாறு தீ வைத்து அழித்துள்ளார்கள்.

இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்பது தொடர்பாக எங்களுக்கு தெரியவில்லை ,ஆனாலும் இந்த பகுதி இராணுவத்தினுடைய எல்லை இல்லை, பொதுமக்கள் வந்து இங்கே மட்டைகளை வெட்டுவது, பனம் பழம் பொறுக்குவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களை ஒருபோதும் இராணுவத்தினர் தடுத்ததில்லை.

ஆனாலும் இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளில் சிலர் ஈடுபடுகிறார்கள். அருகில் காணப்படும் மதுபான சாலையில் மது அருந்திவிட்டு காட்டுப்பகுதியால் சென்றவர்களே இவ்வாறு பனைகளுக்கு தீ வைத்துள்ளார்கள்

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டறிந்து அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவித்தார். (ஐ)

# கிளிநொச்சியில் முன்னறிவிப்பின்றி பிரதேச சபையினர் மேற்கொண்ட நடவடிக்கை





கிளிநொச்சி , ஓக 08

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் ஆர். டி டி. எல்லைக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களின் முற்பகுதியை, பிரதேச சபையினர் எந்தவித அறிவித்தலும் இன்றி திடீரென அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் வர்த்தகர்களால் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினருக்கு இப்பகுதியில் உள்ள அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் முற்பகுதி அகற்றப்படவுள்ளதாக தகவல் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அப்படி வழங்கப்பட்டிருந்தால் வர்த்தகர்கள் ஆகிய நாங்கள் அதற்கு அடிபணிவோம் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பிரதேச சபையின் செயலாளரிடம் வினவிய போது அவ்வீதியானது ஆர் டி டி எல்லைக்கு உட்பட்ட பகுதியாக காணப்படுவதன் காரணமாகவும் இப்பகுதியில் உள்ள நடைபாதை வியாபாரிகளை முற்று முழுதாக அகற்றப்பட வேண்டும் என பிரதேச சபையின் ஊடாக வர்த்தக சங்கத்தினருக்கு கடிதம் மூலம் தகவல் வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒலிபெருக்கி ஊடாகவும் இரண்டு தடவைகள் நடைபாதை வியாபார இடங்களை அகற்றுமாறு தகவல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கும் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக நேற்றைய தினம் பிரதேச சபையினர் நடைபாதை வியாபார இடங்களை அகற்றும்நடவடிக்கையை மேற்கொண்டிருந்த பொழுது அங்கு கூடிய சில வர்த்தகர்களால் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேச சபையின் ஊழியர் ஒருவரையும் தாக்க முட்பட்டதாகவும் இதன் காரணமாக அப்பகுதியில் இருந்து பிரதேச சபையினர் வெளியேறியதுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இச்சம்பவம் தொடர்பாக முறைப்பாடு ஒன்றினையும் பதிவு செய்துள்ளதாக கிளிநொச்சி பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வரிகள்



கொழும்பு, ஓக 08

முக்கிய பொருளாதார கவலைகளைத் தீர்க்கும் நோக்கில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வரிகள் தொடர்பாக இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை என்று ஜனாதிபதிஅநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சவால்களை ஒப்புக்கொண்டு, இலங்கை இந்தப் பேச்சுவார்த்தைகளை வெளிப்படையாகவும் நடைமுறை ரீதியாகவும் அணுகியுள்ளது என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதிகளில் 25ூ க்கும் அதிகமானவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளில் சுமார் 60ூ அமெரிக்க சந்தைக்கு அனுப்பப்படுகிறன.

இதனால் இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவு 350,000 க்கும் மேற்பட்ட ஆடைத் துறை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு முக்கியமானதாக அமைகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

“எந்தவொரு தீர்மானமும் நமது பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்காக நாங்கள் ஒரு வலுவான குழுவை நியமித்து தொடர்ச்சியான உரையாடலில் ஈடுபட்டுள்ளோம்” என்று ஜனாதிபதி கூறினார்.

குறிப்பாக பரஸ்பர கட்டண விகிதங்களை 44ூ இலிருந்து 20ூ ஆகக் குறைப்பதில் அமெரிக்கத் தரப்பிலிருந்து ஆக்கபூர்வமான ஈடுபாட்டிற்கும் அவர் பாராட்டு தெரிவித்தார், இது நடந்துகொண்டிருக்கும் கலந்துரையாடல்களில் குறிப்பிடத்தக்க விளைவாகும் என்று அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இலங்கை சுங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மின்சார வாகனங்கள்

கொழும்பு, ஓக 08

இலங்கை சுங்கம் தனது கட்டுப்பாட்டில் உள்ள 991 **BYD** ரக மின்சார வாகனங்களை பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பதை எதிர்த்து ஜோன் கீல்ஸ் ஊபு ஒட்டோ பிரைவேட் லிமிடெட் தாக்கல் செய்த மனுவின் விசாரணையின் போது இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சமர்ப்பிப்புகளின்படி, சர்ச்சைக்குரிய வரி வேறுபாட்டை குறிக்கும் ரூ. 3.6 பில்லியன் தொகையை அரசுக்கு சொந்தமான வங்கி மூலம் வங்கி உத்தரவாதமாக வழங்க வேண்டும் என்று சுங்கம் நிபந்தனை விதித்துள்ளது. அத்துடன், உத்தரவாதம் தொடர்பான வட்டி செலவுகளை மனுதாரர் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளார்.

முதலில் வைத்திருக்கும் 997 வாகனங்களில், ஆறு வாகனங்கள் தொடர்ந்து விசாரணைகளுக்காக காவலில் இருக்கும் எனவும் மீதமுள்ள 991 முன்மொழியப்பட்ட விதிமுறைகளின் கீழ் விடுவிக்கப்படும்.

முன்மொழியப்பட்ட நிபந்தனைகளுக்கு மனுதாரரின் பகுதியளவு உடன்பாட்டைத் தொடர்ந்து, கோடிட்டுக் காட்டப்பட்ட விதிமுறைகளின் கீழ் வாகனங்களை விடுவிப்பதைத் தொடர சுங்க பணிப்பாளர் நாயகம் நீதிமன்றத்தில் ஒப்புதல் தெரிவித்தார். (ஐ)




# நல்லூரில் பல லட்சம் பக்தர்களுடன் நடைபெற்ற மஞ்சத்திருவிழா

*யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத்திருவிழா நேற்றையதினம் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.*

*சிற்ப சாஸ்திரி ஆகம விதிமுறைப்படி கலையம்சமும் சிற்பங்களும் ஒருங்கே அமையப்பெற்ற அழகிய மஞ்சத்தில் முத்துக்குமார சுவாமியாக முருகப்பெருமான் எழுந்தருளி அருள் பாலித்துள்ளார்.*

*இந்த அழகிய மஞ்சத்திலே முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சியினை காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர்.*

*கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவம் தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.*

*20 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 21 ஆம் திகதி தேர் திருவிழாவும் 22 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஐ)*

# உத்தராகண்ட் மாநிலத்தில் உத்தரகாசியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கிய 274 பேர் மீட்பு



உத்தராகண்ட் மாநிலத்தில் உத்தரகாசியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கிய 274 பேர் மீட்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் காணாமல்போன 9 ராணுவ வீரர்கள் உட்பட 59 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. கங்கோத்ரி கோயிலுக்கு செல்லும் தரளி கிராமத்தில் ஆகஸ்ட் 5ல் மேகவெடிப்பால் பெருவெள்ளம் ஏற்பட்டது. பெருவெள்ளத்தில் சிக்கி இதுவரை 5 பேர் உயிரிழந்த நிலையில் மீட்புப் பணி வேகமெடுத்துள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் தலாலி என்ற கிராமம் மலை பகுதியில் அமைந்துள்ளது. தராலி கிராமம் ஆன்மிக தலமாக கருதப்படும் கங்கை உற்பத்தியாகும் இடமான கங்கோத்ரிக்கு செல்லும் வழியில் உள்ளது. அதனால் இங்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்வது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 5ம் தேதி தராலியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த அதிகனமழை காரணமாக, கீர் கங்கா ஆற்றில் பெருவெள்ளம் ஏற்பட்டது. மலையில் இருந்து ஆர்ப்பரித்து வந்த வெள்ளம், தராலியில் இருந்த 25-க்கும் மேற்பட்ட ஓட்டல்கள், வீடுகளை அப்படியே வாரிச்சுருட்டி சென்றது. இதில் ஏராளமானோர் சிக்கி மாயமானார்கள். மேலும் 4 பேர் பலியானார்கள்.

உடனடியாக தேசிய, மாநில பேரிடர் மீட்பு குழுவினர், இந்தோ-திபெத் படையினர், ராணுவத்தினர் சம்பவ இடத்துக்க விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட பலரில், இதுவரை 274 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அதேபோல் பலியானவர்களில் ஆகாஷ் பன்வார் (35) என்பவர் உள்பட 2 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. இன்னும் 50 பேர் மாயமாகி உள்ளனர். இதில் ஹர்சில் ராணுவ முகாமில் இருந்த ராணுவ வீரர்களும், கேரள சுற்றுலா பயணிகளும் அடங்குவர். அவர்களை தேடும்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மீட்பு பணி குறித்து தேசிய பேரிடர் மீட்புக்குழு டிஐஜி மொஹ்சென் ஷாஹேதி கூறுகையில், ‘எங்களது மீட்பு குழுவின் 3 குழுக்கள் தாராலிக்கு செல்லும் வழியில் உள்ளன. தொடர்ச்சியான நிலச்சரிவுகள் காரணமாக ரிஷிகேஷ்-உத்தரகாசி நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களால் செல்ல முடியவில்லை. இருப்பினும் மாற்று வழியை யோசித்து வருகிறோம்.

டேராடூனில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு குழுக்கள் விமானம் மூலம் அனுப்பப்பட உள்ளன. ஆனால் மோசமான வானிலையால் அவர்கள் புறப்படுவதிலும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. தொடர்ந்து பெய்து வரும் மழை, நிலச்சரிவு, பெருவெள்ளம் ஆகியன மீட்பு பணிக்கு தடைகளாகவும், சவாலாகவும் உள்ளன. இருப்பினும் மாயமானவர்களை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது’ என்றார். (ஐ)

# கூட்டணி கூட தெரியாத எடப்பாடி: ராஜபாளையம் பிரசாரத்தில் நகைச்சுவை



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ‘மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரசார பயணத்தை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார். நேற்றி மாலை 4 மணிக்கு ராஜபாளையம் பழைய பஸ் ஸ்டாண்ட் காமராஜர் சிலை அருகில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: திமுக தலைமையில் அங்கம் வகிக்கின்ற கூட்டணி கட்சி தலைவர்கள், பாஜவிற்கும் உங்களுக்கும் என்ன கொள்கை என்று கேட்கிறார்கள்.

கேரளாவில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் ஒரே கொள்கையாக இருக்கிறதா? மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி, கம்யூனிஸ்ட் கட்சி ஒரே கொள்கையுடன் கூட்டணியா? இது எல்லாம் வைத்துக்கொண்டு வேண்டுமென்றே திட்டமிட்டு அதிமுகவை அவதூறாக விமர்சித்தால் எங்கள் கட்சியினுடைய நிர்வாகிகள் ராஜேந்திரபாலாஜி போன்ற அற்புதமாக பேசக்கூடியவர்கள் உங்களுக்கு பதில் கொடுப்பார்கள். கொள்கை வைத்துள்ள காரணத்தினால் தான் எங்கள் கட்சியை அசைக்க முடியவில்லை.

கொளகை வேறு கூட்டணி வேறு. இதுதான் அதிமுக நிலைப்பாடு. இவ்வாறு அவர் பேசினார். யார் யாருடன் கூட்டணி என்று கூட தெரியாமல் எடப்பாடி பேசியது சிரிப்பலையை ஏற்படுத்தி உள்ளது. கேரளாவில் காங்கிரஸ் - கம்யூனிஸ்ட், மேற்குவங்கத்தில் மம்தா பானர்ஜி - கம்யூனிஸ்ட் எதிரெதிர் கட்சிகளாக உள்ளன. இவர்கள் கூட்டணி அமைத்ததே இல்லை. இதை கூட தெரியாமல் எதற்கு தலைவா இங்கு பேசுகிறீர்கள், குழப்புறீங்களே என்று தொண்டர்கள் புலம்பினர்.

எடப்பாடி பழனிசாமி ராஜபாளையம் ஓட்டலில் இருந்து புறப்பட்டு வரும் வழியில் பூலித்தேவன் மக்கள் முன்னேற்ற இயக்க மாவட்ட செயலாளர் அய்யனார் தலைமையில், வன்னியருக்கு 10.5 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் விவகாரத்தை கண்டித்து, கருப்புக்கொடி காட்டுவதற்காக சிலர் காத்திருந்தனர். அவர்களை போலீசார் உடனடியாக அப்புறப்படுத்தினர். (ஐ)



# கார்த்தி சிதம்பரத்தின் ரூ.1 கோடி டெபாசிட்டை விடுவித்த உச்ச நீதிமன்றம்

வெளிநாட்டு பயணத்திற்கான நிபந்தனையாக கார்த்தி சிதம்பரம் செலுத்திய ரூ.1 கோடி டெபாசிட் பணத்தை உச்ச நீதிமன்றம் விடுவித்தது. ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகனும் காங்கிரஸ் எம்பியுமான கார்த்தி சிதரம்பம், ஏர்செல்-மேக்சிஸ் மற்றும் ஐஎன்எக்ஸ் மீடியா உள்ளிட்ட வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டுள்ளார். இந்த இரு வழக்குகளில் அவர் ஜாமீனில் உள்ளார். கடந்த 2022ம் ஆண்டு கார்த்தி சிதம்பரம் வெளிநாட்டு பயணம் மேற்கொள்வதற்காக நிபந்தனையாக உச்சநீதிமன்றம் ரூ.1 கோடியை டெபாசிட் செய்ய உத்தரவிட்டது.

அதன்படி, கார்த்தி சிதம்பரம் ரூ.1 கோடியை டெபாசிட் செய்து 2023ல் வெளிநாட்டுக்கு சென்று விட்டு, தனது பாஸ்போர்ட்டை மீண்டும் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தார். இந்நிலையில், கார்த்தி சிதம்பரத்தின் ரூ.1 கோடி டெபாசிட் பணமும், அதற்கான வட்டித் தொகையையும் ஒரு வாரத்தில் அவரிடம் திருப்பித் தர உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்ய காந்த், உஜ்ஜல் பூயான், கோடீஸ்வர் சிங் ஆகியோர் கொண்ட அமர்வு உத்தரவிட்டது. (ஐ)

# மாநில கல்விக் கொள்கையை இன்று வெளியிடுகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



மாநில கல்விக் கொள்கையை இன்று (ஆகஸ்ட் 08) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார். மாநில கல்விக் கொள்கை உருவாக்க 2022ல் ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. நீதிபதி முருகேசன் குழு தயாரித்த மாநில கல்விக் கொள்கை வரைவு அறிக்கை 2024-ஜூலையில் சமர்ப்பித்தது. 14 பேர் கொண்ட குழு 650 பக்கங்கள் கொண்ட அறிக்கையை முதல்வர் ஸ்டாலினிடம் சமர்ப்பித்தது. பள்ளி, உயர்கல்விக்கு என்று தனித்தனியாக மாநில கல்வி கொள்கைகளை முதல்வர் வெளியிடுகிறார். 3, 5, 8ம் வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு கூடாது என மாநில கல்விக் கொள்கை குழு பரிந்துரைத்துள்ளது. தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. (ஐ)

# இங்கு தாய்மை விற்கப்படும்!



"தாய்மை தெய்வீகமானது. "
"தாய்மை உன்னதமானது."
"தாய்மை தூய்மையானது. "

போன்ற துதிப்பாடல்களில் இருந்து இன்றைய பெண்கள் தூர விலகி இருக்க வேண்டும்.

இன்ஸ்டா இன்ப்ளுாயர்ஸ் காலமான நவீன உலகில், எந்தத் துறையைப் பற்றியும் துளி அறிவும் இல்லாமல், வாயால் வடை சுட்டுப் பந்தியை நிரப்பித் தம் தொந்தியை நிரப்பிக் கொள்ளும் ஒரு கொள்ளைக்கூட்டம் உருவாகியிருக்கிறது.

பார்வையாளர்களைக் குற்றவுணர்வுக்கு உள்ளாக்குவதன் மூலம் சம்பாதிக்கும் ராஜதந்திரங்களால் நிறைந்துள்ளது இணையவெளி.

6 வயதில் உன் மகன் பெருக்கல் கணக்கு போடவில்லையானால், 7 வயதில் உன் மகளுக்கு ரோபாடிக் தெரியவில்லையானால்உனக்குத்தாயாகஃ தந்தையாக இருக்கவே தகுதி இல்லை. நல்ல அப்பாவாகஃ அம்மாவாக இருக்க வேண்டுமா? நான் விற்கும் 2 மணி நேர இணைய வகுப்பிற்குப் பணம் கட்டி சேர்.

நான் அரையும் குறையுமாக வாசித்து உருவேற்றி வைத்திருக்கும் வெளிநாட்டு அறிவியளாலர்களின்தியரிகள்எதையாவது உன் தலையில் அரைகுறையாக ஏற்றுவேன். அதுவே வேதம் என உன் வாழ்வை நடத்துவதே நல்ல பெற்றோருக்கு அழகு என்பதான விளம்பரங்கள் சமூக வலைதளங்கள் முழுக்கக் குவிந்து கிடக்கின்றன.

வீட்டில் , அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பேசக்கூட நேரமில்லாததால், பிள்ளை பசிக்கு அழும் என்பதைக்கூட இந்த இன்ப்ளுாயர்சர்களிடம் தான் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது.

தனக்குப் பிரசவம் பார்த்த மருத்துவரிடமோ, குழந்தைக்குத் தடுப்பூசி போட்ட குழந்தை நல மருத்துவரிடமோ ஆலோசிக்க வேண்டிய, கேட்டு அறிந்து கொள்ள வேண்டியவற்றையும் ஒன்லைனில் தேடுவதால் உண்டாகும் விளைவு வியாபார உத்தி தெரிந்த குறை புத்திக்காரர்களிடம் சிக்கிப் பணத்தையும் நிம்மதியையும் இழப்பது.

சமீப வீடியோ ஒன்றில் ஒரு பெண், "குழந்தை பெற்றவுடன் கடவுளைப் போல உணரவில்லையானால், உங்கள் கர்ப்பத்தில், குழந்தைப்பேறில் ஏதோ குறை உள்ளது" என உளறிக் கொட்டியுள்ளார். 10-15 பேர் முன்பு நிர்வாணமாகக் குழந்தை பெற்றுக் கொள்கிறோம் என்கிறார்.

எந்த மருத்துவமனையில் நிர்வாணமாக பிரசவம் பார்க்கிறார்கள்? அதுவும் 10-15 பேர் சூழ நின்று பிரசவம் பார்க்கிறார்கள்? உண்மையிலேயே இவர் குழந்தை பெற்றாரா என்கிற சந்தேகத்தைக் கிளப்பும்படியான கருத்துகளை உதிர்த்திருந்தார்.

ஒரு மருத்துவர், 2 செவிலியர்கள், மயக்க மருந்து நிபுணர் (தேவைப்பட்டால்), குழந்தை பிறந்த பின் குழந்தை நல மருத்துவர் ஒருவர் என மொத்தமே 5 நபர்களுக்குக் குறைவாகவே ஒரு பிரசவத்திற்கு மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும், நிர்வாணமாக எங்கும் பிரசவம் பார்ப்பதில்லை. நீண்ட அங்கி போன்ற மருத்துவ உடை அல்லது நைட்டி போன்ற எளிய உடைகளுடன், தேவையான அளவு உடல்பகுதி வெளிப்படுமாறே பிரசவம் நடக்கும்.



சிசரியன் என்றால் வயிற்றுப்பகுதி மட்டுமே வெளியில் தெரியும். குழந்தை பெற்ற அனைவருக்கும் தெரிந்த உண்மை இது. இதையே மாற்றி ஒருவிதமாகச் சொல்ல முடிபவர்கள் இன்னும் எவ்வளவு பொய்தான் சொல்ல மாட்டார்கள்.

குழந்தை பிறந்தவுடன் மயங்கிவிடும், குளிர்காய்ச்சல் வரும், வலிப்பு வரும், ஒரு வெறுமை வரும், உறக்கம் வரும் இப்படி என்ன உணர்வு வேண்டுமானால் பிரசவித்த தாய்க்குத் தோன்றலாம்.

அவள் அனுபவித்த கர்பகால வாழ்வியல், உறவினர் கணவரின் அனுசரணை அல்லது பாராமுகம், உடலின் தாங்குதிறன், பிரசவத்தில் ஏற்பட்ட இடர்பாடுகள் என எத்தனையோ இருக்கின்றன.

"குத்தினது நண்பனா இருந்தா, கத்தாம சிரிச்சிட்டே சாகணும்" என்பது போல, "கடவுளைப்போல உணரலைன்னா உன் தாய்மையில் கோளாறு" என்பது முட்டாள்தனமான பேச்சு இல்லையா?

முட்டாள்தனம்தான். அவர்களது கூற்றுகளை உண்மையென நம்பி, குற்றவுணர்ச்சிக்கு உள்ளாகி, "எப்படிச் சிரித்துக்கொண்டே பிள்ளை பெற்றுக்கொள்வது?" என அவர்களிடமே போய் நின்றால் நிச்சயம் முட்டாள்கள்தான்.

எங்களது (அ) நாங்கள் பரிந்துரைக்கும் பிரசவ மையங்களில் சேர்ந்தால் வலிக்காமல் பிள்ளை பெற்றுக்கொள்ளலாம். நாங்கள் நடத்தும் கர்ப்பகால வகுப்புகளில் கலந்து கொண்டால் வயிற்றிலேயே குழந்தையை ஐன்ஸ்டைன் ஆக்கிவிடலாம் என்றெல்லாம் அளந்துவிட்டு, அதன் மூலம் தொழிலைப் பெருக்கிப் பெரும் வருமானம் ஈட்டுகின்றனர்.

பேசாமல் சைகை மூலமாக ரீல்ஸ் போட்டுப் பிரபலமான இன்ப்ளுாசர் ஒருவர், பின் கர்ப்பகால வகுப்புகள் என ஆரம்பித்தார். பின் பிரசவ மையம். குழந்தை வளர்ப்பு என ஒரு கஷ்டமர் பிடித்தால் 4 வருடங்களுக்குச் சுலபமான வருவான வழி.

உடனே பெண்கள் முன்னேறினால் பிடிக்காதா? எனக் கட்டையை எடுத்துக் கொண்டு அடிக்க வராதீர்கள். பெண்கள் தன் சக பெண்களைக் குற்றவுணர்விற்கு ஆளாக்கி அதன் மூலம் முன்னேறலாமா என்பதுதான் கேள்வி.

ஒரு குழந்தை 9 மாதத்தில் நடக்கும், அதே குழந்தை பிறந்த அதே நேரத்தில் அதே மருத்துவமனையில் பிறந்த இன்னொரு குழந்தை 11வது மாதத்தில் நடக்கலாம். ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மையானது.

இரட்டைக் குழந்தைகளானாலுமே இரண்டும்வெவ்வேறு உயிர்கள். ஒவ்வொரு குழந்தையும் வேறானதுதான். அவர்கள் தங்களுக்கான காலத்தை எடுத்துக் கொண்டே கற்றுக் கொள்வார்கள். இது இயற்கை. இதுதான் இயல்பு.

என் பிள்ளை 9 மாதத்தில் நடந்துவிட்டது, உன் பிள்ளை நடக்கவில்லை. அப்படியெனில் நீ தூய்மையான தாய் இல்லை. உன் தாய்மையில் பிரச்சினை உள்ளது. நீ நல்ல தாயாக மாற வேண்டுமானால் உன் பிள்ளை 9 மாதத்திலேயே நடக்க வேண்டுமானால் நீ என்னிடம் வந்து கற்றுக் கொள் என்பது எத்தகைய அரக்ககுணம்.

இத்தகைய அரக்ககுணங்களையே இந்தத்தாய்மையைப் புனித பிம்பமாக்கி, பணமரமாக மாற்றுபவர்கள் செய்கிறார்கள்.

இவர்கள் பேசுவதெல்லாம் உண்மை என நம்பி, பின்பற்றிப் பாதிக்கப்படுவது, மன உளைச்சலுக்கு ஆளாவது சக பெண்களே.

இந்தப் புனிதப்படுத்தல்களின் கோரமுகம் எப்படிப்பட்டது எனில், சுகப்பிரசவம்? ஆனால், தான் நல்ல தாய்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதில் சீனாவுக்கு நெருக்கமாக இந்தியா உள்ளது



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்தியாவிற்கு இரண்டாவது கட்டமாக மேலும் சில தடைகளை விதிக்க உள்ளதாக மிரட்டல் விடுத்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்கும் வரிகளை விதித்து உத்தரவிட்டார். அதிபரின் இந்த வரி விதிப்பு நடவடிக்கையில் இந்தியாவிற்கு 25 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கி உக்ரைனுக்கு எதிரான போரில் நிதியுதவி அளிப்பதாக அதிபர் டிரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இதற்காக இந்தியா மீது கூடுதலாக மேலும் இந்த 25 சதவீத வரிவிதிப்பை அறிவித்தார். இதன் மூலமாக இந்தியா மீது விதிக்கப்பட்ட மொத்த வரியானது 50 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இதில் 25 சதவீத புதிய வரியானது நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. கூடுதலாக விதிக்கப்பட்ட 25 சதவீத வரியானது அடுத்து 21 நாட்களில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது ஆகஸ்ட் 27ம் தேதி முதல் நடைமுறைக்கு வரக்கூடும் என தெரிகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிபர் டிரம்ப்பிடம் உக்ரைன் மற்றும் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் எட்டப்பட்டால் இந்தியா மீதான கூடுதல் வரிகள் கைவிடப்படுமா என்ற கேள்விக்கு, அது குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என்று அதிபர் தெரிவித்துள்ளார். மேலும் சீனா போன்ற நாடுகளும் ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும்போது இந்தியாவிற்கு மட்டும் கூடுதல் வரிகள் ஏன் என்றும், இந்தியாவை ஏன் தனிமைப்படுத்துகிறீர்கள் என்றும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த அதிபர் டிரம்ப், பரவாயில்லை. வரிகள் விதிக்கப்பட்டு 8 மணி நேரம் மட்டுமே ஆகின்றது. எனவே அடுத்ததாக என்ன நடக்கிறது என்று பார்ப்போம். நீங்கள் இன்னும் நிறையப் பார்க்கப் போகிறீர்கள். நீங்கள் இரண்டாவது கட்ட தடைகளை பார்க்கப்போகிறீர்கள்” என்று தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்பிற்கும் இடையே வரும் நாட்களில் சந்திப்பு நடத்துவது குறித்து உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்தியாவிற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் கூடுதல் வரியை விதித்துள்ளார். இந்நிலையில் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் நேற்று முன்தினம் ரஷ்யா சென்றார். நேற்று ரஷ்ய அதிபர் புடினை அவர் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ஐ)

# ‘காசாவை இஸ்ரேலுடன் இணைக்க மாட்டோம்’



“காசாவை இஸ்ரேலுடன் இணைக்கும் எண்ணமில்லை, அதை இடைக்கால நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்க விரும்புகிறேன்,” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று கூறினார்.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே கடந்த 2023ல் போர் துவங்கியது.

இந்த போரில் ஹமாஸ் பயங்கரவாதிகள், காசாவைச் சேர்ந்த பொதுமக்கள் என 60,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். காசாவின் பெரும்பகுதி இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இருப்பினும் இஸ்ரேலில் இருந்து பிடித்துச் செல்லப்பட்ட 251 பிணைக் கைதிகளில் இன்னும் 20க்கும் மேற்பட்டோர் ஹமாஸ் வசம் உள்ளனர். அதில் ஒருவரை பட்டினி போட்டு அவரை வீடியோ எடுத்து ஹமாஸ் சமீபத்தில் வெளியிட்டது சர்ச்சையானது.

இந்நிலையில், காசா விவகாரத்தில் எதிர்கால திட்டம் என்ன என்பது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று கூறியுள்ளதாவது:

ஹமாஸ் ஆயுதங்களை கைவிட்டு, பிணைக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவித்தால், போர் நாளையே கூட முடிவடையலாம்.

போருக்குப்பிந்தைய திட்டத்தின் ஒரு பகுதியாக, காசாவிற்குள் ஒரு பாதுகாப்பு வளையம் அமைக்கப்படும். இது எதிர்கால அச்சுறுத்தல்களை தடுக்கும்.

காசாவை இஸ்ரேல் கட்டுப்பாட்டில் வைத்திருக்காது. இஸ்ரேலுடனும் இணைக்காது. அதற்குபதில் சர்வதேச இடைக்கால நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்க விரும்புகிறேன். (ஐ)

# இந்தியாவுடன் 20 ஆண்டுகள் கட்டமைத்த உறவு பாதிக்கும் டிரம்ப்பை எச்சரிக்கும் அமெரிக்க செனட்டர்



அதிபர் டிரம்ப் விதித்த வரி விதிப்பினால், இந்தியா - அமெரிக்கா இடையே இத்தனை ஆண்டு காலம் கட்டமைக்கப்பட்ட வலுவான உறவு பாதிக்கப்படுவதாக அமெரிக்கா செனட்டர் (மேலவை உறுப்பினர்) க்ரிகோரி மீக்ஸ் குற்றம்சாட்டியுள்ளார். ரஷ்யாவுடன் எண்ணெய் வர்த்தகம் செய்வதை எதிர்த்து இந்தியப் பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்துள்ளார். இதன்மூலம், இந்தியா - அமெரிக்கா உறவில் சிக்கல் எழுந்துள்ளது. இந்த விவகாரத்தை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வரும் நிலையில், அமெரிக்காவின் இந்த செயல் நியாயமற்றது என்று அதிருப்தி குரல் எழுந்து வருகிறது.

இந்தியாவுடன் முழு வெளிப்படையான பேச்சுவார்த்தைத் சொல்கிறது அமெரிக்கா

இந்த நிலையில், இந்தியா மீது 50 சதவீதம் வரி விதித்த அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் முடிவை ஜனநாயக கட்சியைச் சேர்ந்த அமெரிக்க செனட்டரும், மூத்த காங்கிரஸ் உறுப்பினருமான க்ரிகோரி மீக்ஸ் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், டிரம்பின் இந்த வரி விதிப்பு பிடிவாதம் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே 20 ஆண்டுகளாக கவனமாக கட்டமைக்கப்பட்ட வலுவான உறவைப் பாதிக்கும்.

இருநாடுகளுக்கு இடையே ஆழமான மூலோபாய, பொருளாதார உறவுகள் உள்ளன. எந்தக் கவலைகளையும் நமது ஜனநாயக மதிப்புகளுடன் பொருந்தும் வகையில், இரு தரப்புக்கும் மரியாதைக்குரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும், என்று கூறினார் .(ஐ)

# சூடான் ராணுவ தாக்குதலில் 40 கூலி படையினர் பலி

சூடானின் டார்பர் மாகாணத்தில் விமான நிலையத்தில், ராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில், கொலம்பியா நாட்டு கூலிப்படையினர், 40 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்ரிக்க நாடான சூடானில், 2021ல் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து அதிகார மோதலால், ஆர்.எஸ்.எப்., எனப்படும் துணை ராணுவப் படை, ராணுவத்துக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் துணை ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நியலா விமான நிலையத்தின் மீது ராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதில், கொலம்பியா நாட்டைச் சேர்ந்த, 40 கூலிப் படையினர் கொல்லப்பட்டனர்.

மேலும், துணை ராணுவப் படைக்கு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அனுப்பியுள்ள ஆயுதங்களுடன் வந்த படகும் அழிக்கப்பட்டது. (ஐ)

## பொரளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் இளைஞர்கள் குழுவை குறிவைத்துத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

ரி - 56 துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுச் சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளில் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த 5 இளைஞர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் களனியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரும், கொழும்பைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரும்இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த 21, 23 வயதுடைய 3 இளைஞர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் கூறுகையில்,

“துப்பாக்கிச்சூடு ‘குடு துமிந்த’ கும்பலால் நடத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள ‘குடு சத்து’வின் சகோதரர் ஒருவர், நேற்று இரவு சம்பவ இடத்துக்கு வந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ள நிலையில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல், டுபாயில் தலைமறைவாக உள்ள இரு போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையிலான மோதலின் விளைவாக இருக்கலாம் எனப் சந்தேகிக்கின்றோம்.” - என்றனர்.

பொரளை பொலிஸார் மற்றும் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூதூரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோதியதில் காரில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, காரில் பயணித்த மற்றுமொருவர் படுகாயம் அடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காரில் பயணித்த தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய போதனாசிரியரான ஹினாயத்துல்லாஹ் ஜெம்சித் (வயது 33) என்பவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் தோப்பூரைச் சேர்ந்த முஸ்தகீம் சியான் (வயது 25) எனத் தெரியவருகின்றது. ரிப்பர் சாரதிக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

காரில் பயணித்தவர்கள் தோப்பூரில் இருந்து மன்னாருக்கு வேலை நிமித்தமாகச் சென்று கொண்டிருந்தபோது எதிர்த்திசையில் வந்த ரிப்பர் வாகனத்துடன் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கணவரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மெதயெல்ல வாவி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நீண்ட காலமாக நிலவிய குடும்பத் தகராறினால் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பெண்ணின் கணவர் என அடையாளம் காணப்பட்ட 48 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குளவிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேளையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று மதியம் இடம்பெற்றுள்ளது.

சாமிமலை ஹொரன பெருந்தோட்ட மார்க்கத்துக்கு உரித்தான ஓல்ட்டன் தோட்ட கிங்கோரா பிரிவைச் சேர்ந்த சிவா கனகரட்னம் (வயது 36) என்பவரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவர் இன்று மதியம் தான் வளர்க்கும் பசுவுக்குப் புல் வெட்டிக் கொண்டு குடிதண்ணீர் குழாய் செப்பனிடச் சென்ற வேளையில் அதி விஷமுள்ள குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளையில் மரணித்துள்ளார். இவரது ச டலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் உள்ள சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வடக்கை நிச்சயம் கட்டியெழுப்புவோம்! சபையில் அமைச்சர் சந்திரசேகர் உறுதி

கொழும்பு, ஓக. 08

எமது ஆட்சியில் வடக்கு மாகாணத்தை நிச்சயம் கட்டியெழுப்புவோம் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“கடந்த காலங்களில் வடக்குக்கு எதிராக அநீதிகளே கட்டவிழ்த்துவிடப்பட்டன. அதனால்தான் போர்கூட ஏற்பட்டது. எனினும், வடக்கைக் கட்டியெழுப்புவதற்குரிய அனைத்து வேலைத்திட்டங்களும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்ய ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் இதில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே சில எதிரணி உறுப்பினர்கள் அரசை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் வறுமையால் அதிகளவு பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது. இந்த மாகாணத்தை நாம் நிச்சயம் கட்டியெழுப்ப வேண்டும்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசுகளும், வடக்கை நோக்கியே அனைத்து அநீதிகளையும் கட்டவிழ்த்துவிட்டன.

வன்முறைகள் தலைவிரித்தாடின. இறுதியில் அது யுத்தமாக மாறியது. மக்கள் கொல்லப்பட்டனர். சொத்து இழப்புகள் ஏற்பட்டன.

போர் முடிவடைந்தும் வடக்கு மாகாணம் கட்டியெழுப்பப்படவில்லை. எனினும், எமது ஆட்சியின் கீழ் வடக்கை நோக்கி அனைத்து செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் வடக்கு மாகாணம் நிச்சயம் கட்டியெழுப்படும். மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுள்ளனர். 200 வருடங்களாக வஞ்சிக்கப்பட்டுள்ளனர். அவர்களை அனைத்து வழிகளிலும் மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

# நிகினி போயா தின தர்ம போதனை நிகழ்வு





கொழும்பு, ஓக. 08

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அறிவுறுத்தலின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் ஏற்பாடு செய்யப்படும் தர்ம போதனை நிகழ்வுத் தொடரின் மற்றுமொரு கட்டம் இன்று நிகினி போயா தினத்தை முன்னிட்டு கரகம்பிட்டிய சுபோதாராமய புராண ராஜமஹா விகாரையில் நடைபெற்றது.

இன்றைய தர்ம போதனையை மாத்தளை, உக்குவலை கலல்பிட்டிய புராண விகாரையின் விகாராதிபதியும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தத்துவவியல் மற்றும் உளவியல் கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருமான சங்கைக்குரிய கரந்தகொல்ல விஜிததிஸ்ஸ தேரர் நிகழ்த்தினார்.

# இங்கு தாய்மை....விற்கப்படும்...

இல்லையேல் நீ தாயாக இருக்க தகுதியில்லை எனச் சொல்லிச் சொல்லிப் பிரசவ மையங்களுக்கு வாடிக்கையாளர்களைப் பிடிக்கிறார்கள்.

இவர்களை அணுக இயலாத பெண்கள், வீட்டிலேயே சுகப்பிரசவம் என இறங்கி உயிரை விடுகிறார்கள். சமீப ஆண்டுகளில் வீட்டிலேயே சுகப்பிரசவம் பார்த்துச் செய்திகளில் இடம்பெற்ற தாய்மார்களின் ஆவிகளுக்குக் கண்ணீர் வருமானால் அது ஒரு சிறுகுளமாகியிருக்கும்.

சுகப்பிரசவம் என்கிற ஒன்று இருக்கிறதா என்ன? எது சுகப்பிரசவம்? யாருக்கு சுகம்? பிள்ளைப் பெறும் வலி என்ன என அறியாத யாரோ எழுதி வைத்த வார்த்தையாக இருக்க வேண்டும்.

இந்த ‘சுகப்பிரசவத்தால்’ நம் முந்தைய தலைமுறைகளில் எத்தனை மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதும் இப்போது நவீன மருத்துவத்தின் உதவியால் எத்தனை மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதும் முகத்தில் அடித்தாற்போல புரிய வேண்டுமானால், தற்காலத்தில் ஏதேனும் ‘சித்தி கொடுமை’ கதைகளோ, திரைப்படங்களோ வந்திருக்கின்றனவா எனத் தேடுங்கள்.

சில பத்தாண்டுகளுக்கு முன் எத்தனை ‘சித்திக் கொடுமை’ கதைகள் நம் சமூகத்தில் இருந்தன என்பதைக் கண்டறியுங்கள்.

பெண்கள் பிரசவத்தில் சாகாமல், பிள்ளைகள் சித்திக் கொடுமைகள் எனப்படும் தகப்பனின் இயலாமையை எதிர்கொள்ளாமல் வாழ்வதற்கு நவீன மருத்துவ முன்னேற்றமும் மருத்துவர்களும் தான் காரணமேயன்றி சமூகவலைதள தூண்டிகள் அல்ல.

கொஞ்சமும் மனதில் ஈரமும் இரக்கமும் இல்லாத காட்டுமிராண்டித்தனம் நிரம்பியவர்களால் மட்டும்தான், நான் சொல்லும் இலக்கணத்திற்குள் இல்லையானால், நீ வாழவே தகுதியில்லை என்பதான அரிய முத்துகளை உதிர்க்க இயலும்.

சரி அப்படி அரிய முத்துகளை உதிர்க்கிறார்களே, இவர்களுக்குத் தொடர்புடைய துறையில் எந்த அளவுக்கு நிபுணத்துவம் இருக்கிறது எனப் பார்த்தால் அதிர்ச்சிதான் மிஞ்சும்.

இணையவழியே இவர்களைப் போன்ற யாராவது நடத்தும் வகுப்புகளில் கலந்துகொண்டு வாங்கிய சான்றிதழ், வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஃகட்டுரையாளர்களின் அறிக்கைகளில் சில சுடப்பட்ட வார்த்தைகள், புகழ்மிக்க மனோதத்துவ நிபுணர்களின் சில ஆலோசனைகள் அத்தனையும்

கலந்து அடித்து ஓவனில் வைத்து சூடான கப் கேக்குகளாக நீட்டுகிறார்கள். மேலே தூவப்படும், “உன் குழந்தையோட எதிர்காலமே இதுலதான் இருக்கிறது” என்பது போன்ற சோக்லேட் சிப்ஸ்களில் மயங்கி கேக் வாங்கித் தின்று நீரிழிவு வந்தபின், குய்யோ முய்யோ எனக் கூப்பாடு போடுவதற்குள் காலம் கடந்துவிடும்.

பேக்கரி உச்சத்தில் இருக்கும். எதிர்க்கவே ஆள் இருக்காது.

உங்கள் சுகருக்கு நீங்கள்தான் பொறுப்பே தவிர, பேக்கரி இல்லை அல்லவா?







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2025 வெளியிடப்பெற்றது.